# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண்.142/2018/பே.1
ஆணை நாள்: 17 -10-2018

திருமதி. E. சாந்தி,
W/O, திரு. இசக்கியப்பன்,
4/52, பஞ்சலிங்கபுரம்,
பிள்ளையார்கோயில் தெரு,
மகாதானபுரம்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 702. -- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சுசீந்திரம் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், பஞ்சலிங்கபுரம், பிள்ளையார்கோவில் தெரு, கதவு எண்.4/52 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. E. சாந்தி என்பவரது 20.06.2018ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.06.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.142/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனுவின் மீது அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் இறுதி ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திருமதி.E.சாந்தி, கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் மீது மேற்படி பேரூராட்சியில் முறையாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடாதது மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கு முறையாக தகவல் தெரிவிக்காதது போன்ற புகார்களை தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 27.06.2018 நாளிட்ட அறிவிப்பாணையினைத் தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண்.279/2018/அ.1/நாள்.23.07.2018ல் தனது விளக்க அறிக்கையினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்தரம் பேரூராட்சியில் கடந்த ஒகி புயலினால் சேதமடைந்த பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் குடிநீர் திட்ட பைப்லைன் பழுதுகள் சரி செய்வதற்கு பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.12063/2017/B 2/நாள்.21.03.2018ன்படி மூன்று சாலைப்பணிகளுக்கும் ஒரு குடிநீர் திட்டப் பணிக்கும் நிர்வாக அனுமதி பெறப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் மேற்படி பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு, நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் இயக்குநரக உதவி செயற்பொறியாளரின் 23.03.2018 நாளிட்ட தொழில் நுட்ப அனுமதியுடன், சுசீந்திரம் பேரூராட்சி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.26/2018/அ.1/நாள் 02.04.2018ன் மூலம் பேரூராட்சியில் பதிவு செய்யப்பட்ட 16 ஒப்பந்தக்காரர்களுக்கும் 02.04.2018 அன்று அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டு, 16.04.2018 அன்று நமூனா படிவம் வழங்கப்படும் எனவும், 17.04.2018 பிற்பகல் 3.00 மணிக்குள் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பேரூராட்சி அலுவலகத்தில் சேர்க்கப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் 17.04.2018 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் சுசீந்திரம் பேரூராட்சியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களில் திரு.ஆர்.சி.பரமேஸ்வரன், திரு.எம்.கிருஷ்ணகுமார், திரு.பி.அப்துல் மஜீத், திரு.கி.செந்தில் கணேஷ், மற்றும் திரு. ஏசுரவி என ஐந்து ஒப்பந்தக்காரர்கள் கலந்து கொண்டதாகவும், இப்பணி தொடர்பாக சுசீந்திரம் பேரூராட்சியில் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களில் வேறு எவரும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கிடைக்கப்பெறவில்லை என இது வரை எந்த புகாரும் அளிக்கவில்லை எனவும், மேலும் பேரூராட்சியின் வளர்ச்சிப் பணிகள் எதுவாக இருப்பினும் ஒப்பந்தக்காரருக்கு சாதகமாக ஒதுக்கப்படுவதில்லை எனவும், அனைத்து வளர்ச்சிப் பணிகளுக்கும் திறந்தவெளியான ஒப்பந்தம் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் மட்டுமே பணிகள் செய்ய ஒப்பந்தக்காரர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்படுவதாகவும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 14.08.2018ம் நாளிட்ட அழைப்பாணையில் இப்பொருள் தொடர்பாக தங்களது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் 01.10.2018ல் ஆஜராகத் தெரிவித்து முறையீட்டு மனுதாரர் மற்றும் சுசீந்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு ஆணையிடப்பட்டது.

இதன்படி இம்முறைமன்ற நடுவத்தில் 01.10.2018 அன்று ஆஜரான சுசீந்திரம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.கி.எட்வின்ஜோஸ், தனது வாக்குமூலத்தில், தான் 19.06.2017 முதல் சுசீந்திரம் பேரூராட்சியின் செயல் அலுவலராக உள்ளதாகவும், முறையீட்டு மனுதாரர் சுசீந்திரம் பேரூராட்சியில் ஒப்பந்தக்காரராக உள்ளதோடு பணிகளையும் செய்து வருவதாகவும், இப்பொருள் தொடர்பாக தன்னால் 23.07.2018ல் ஒரு விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதில் மனுவில் குறிப்பிட்டுள்ள பணிகள் குறித்து பேரூராட்சியில் பதிவு செய்துள்ள 16 ஒப்பந்தக்காரர்களுக்கும் 12.04.2018ல் முறையான அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும், 17.04.2018ல் ஒப்பந்த பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களில் 5 ஒப்பந்தக்காரர்கள் கலந்து கொண்டதாகவும், இது தொடர்பாக எந்த ஒப்பந்தக்காரரும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கிடைக்கப்பெறவில்லை என புகார் அளிக்கவில்லை எனவும், திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டே பணிகள் வழங்கப்படுவதாகவும், மேலும் சுசீந்திரம் பேரூராட்சியின் ஒப்பந்தக்காரரும், முறையீட்டு மனுதாரருமான திருமதி.E சாந்தி தற்போது ஒப்பந்தப் பணிகளை செய்து வருவதாகவும் தனது விளக்கத்தில் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரருக்கு இம்முறைமன்ற நடுவத்தால் தனது முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினை தெரிவிக்க வாய்ப்பளித்தும் அதனை பயன்படுத்திக் கொள்ளாமல், இம்முறைமன்ற நடுவத்தில் 01.10.2018 அன்று விசாரணைக்கு ஆஜராக தவறியுள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனு, சுசீந்திரம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் 01.10.2018ம் தேதிய வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுதாரர் தனது விளக்கத்தினை பதிவு செய்ய இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பியும், அவ்வாய்ப்பினை பயன்படுத்தி தனது விளக்கத்தினை பதிவு செய்திட ஆஜராகாததைக் கருத்தில் கொண்டு, இது குறித்து முறையீட்டு மனுதாரருக்கு கூறிக்கொள்ள ஏதும் இல்லை எனக் கருதி இம்முறையீட்டு மனுவின் மீது தொடர் நடவடிக்கை கைவிடப்படலாம் என முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 17 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்

1.திருமதி. E சாந்தி,
W/O, திரு. இசக்கியப்பன்,
4/52, பஞ்சலிங்கபுரம்,
பிள்ளையார்கோயில் தெரு,
மகாதானபுரம்,
கன்னியாகுமரி மாவட்டம் – 629 702.

2. செயல் அலுவலர்,
சுசீந்திரம் தேர்வு நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
நாகர்கோவில் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்.